[1986 நவம்பர் 18

நிரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இவ்வாறு தொடங்கப்படுகிற சுயநிதிக் கல்லூரிகளிலே ஹாஸ்டல் வசதி, சாப்பாடு வசதி, போன்றவற்றிற்காக போடப்படுகிற மெஸ் பில், பெறப்படுகிற தொகை அதிகமாக இருக்கிறது என்று பலர் புகார்கள் கூறியிருக்கிறார்கள். அவைகளுக்காக அந்தக் கல்லூரிகள் இவ்வளவு தான் வாங்க வேண்டுமென்ற முறையிலே தொகையை நிர்ணயம் செய்ய அரசு முன் வருமா? அப்படிச் செய்வதன்மூலமாக டிஸ்கிரிமினேஷன், ஏற்றத் தாழ்வு ஆகியவற்றை அகற்றுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பாகுபாடுகள் இருக்கின்றனவா என்ற தகவல் இல்லை. அப்படி இருப்பின் அவற்றைக் களைய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் நடமாடும் நூலகங்கள்.

53—(*வினா எண். 7648)—திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நீலகிரி மாவட்டத்தில் நடமாடும் நூலகங்கள் அமைக்க அரசு பரிசீலனை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் மலைப்பாங்கான பகுதியாக இருப்பதால் அங்கே உதகை, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் ஆகியவை தவிர மற்றப் பகுதிகள் அனைத்துக் கிராமப் பகுதிகளாக இருப்பதால் அங்கே போதுமான நூலகங்கள் இல்லை; நூலகங்கள் அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் அமைச்சர் அவர்களிடத்திலேயும் நேரிடையாகக் கொடுத்துள்ளேன். ஆகவே ''இல்லை'' என்பதை விட அதை மறுபரிசீலனை செய்து அங்கே நூலகங்களை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற் குறிப்பு பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான அடிப்படையில் இருக்கிறது. மலைப் பகுதியிலே, ஆங்காங்கு மக்கள் தொகை குறைவாக இருந்த போதிலும் நூலகங்களை அமைக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய இலக்கியமாக திருக்குறள்.

54—(*வினா எண். 8316)—திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்குறள் தேசிய இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறள் தேசிய இலக்கியமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட உலக மனித சமுதாயத்திற்கு எல்லாம் ஒட்டு மொத்தமான வாழ்க்கை நலன்களையும், சமூக நலன்களையும், அரசியல் வழி முறைகளையும் எடுத்துச் சொல்கிற திருக்குறள் தேசிய இலக்கியமாக ஆக்கப்பட வேண்டுமென்று முன்னாள் அற நிலையத் துறை அமைச்சர் அவர்கள் கூட கருத்துத் தெரிவித்தார்கள். அதை இந்த அரசின் கருத்தாக ஏற்று அது தேசிய இலக்கியமாக ஆக்கப்படுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஏற்கனவே நாம் மைய அரசுக்கு எழுதி இருக்கிறோம். எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் பொதுமறையாக இருந்து வருகிற பொதுத் தன்மையையும் சாதி மத சமயப் பாகுபாடுகளுக்கு அப்பால் ஒரே பொக்கிஷமாக இருக்கிற காரணத்தால் அது தேசிய இலக்கியமாக்கப்பட வேண்டுமென்று மீண்டும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி திருக்குறளை தேசிய இலக்கியமாக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்து இருக்கிறதோ அதைப் போல இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தையும் தேசிய நூலாக ஆக்குவதற்கு மைய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?